# முதல்வர் விஜய், உங்க குடும்பம் எங்கே சார்?

## அவர்களை ஏன் இப்படி நடுத்தெருவில் கைவிட்டீர்கள்?

# அசிங்கமான பின்னணியை வைத்துக் கொண்டு எந்த முகத்தோடு சட்டமன்றத்தில் நின்று - அடுத்தவர்கள் குடும்பத்தைப் பற்றி குட்டிக் கதை சொல்கிறீர்கள்?

### முதல்வர் விஜய்க்கு – தி.மு.க. ஐ.டி. விங் வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, ஜூன் 25 -

சட்டமன்றம் என்பது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் விவாதிக்கும் மாண்புமிகுந்த இடம். அங்கே மிக மலிவாக, சட்டமன்றத்தின் கண்ணியத்தையே குழி தோண்டிப் புதைத்திருக்கிறார் இந்த ‘இன்ஸ்டா அரசன்’!

எதிர்க்கட்சிகளை நக்கல் செய்கிறேன் பேர்வழி என அடுத்தவர் அப்பாவைத் தேடும் C.M சார், நாங்க நேரடியாகவே உங்களுக்கும் உங்க Virtual Abusersக்கும் புரியும் மொழியிலேயே கேட்கிறோம்.

உங்க குடும்பம் எங்கே சார்?

அவர்களை ஏன் இப்படி நடுத்தெருவில் கைவிட்டீர்கள்?

உங்கள் சொந்தப் பிள்ளைகளின் நண்பர்கள் இன்று, “உங்க அப்பா எங்கடா?” என்று கேட்டால், அந்தப் பிள்ளைகள் என்ன பதில் சொல்வார்கள் என உங்களுக்கு என்றாவது உறைத்திருக்கிறதா?

உங்களது சொந்த மனைவியே, “என் கணவன் இன்னொரு நடிகையோடு தொடர்பில் இருக்கிறார்” என்று கூறி நீதி மன்றத்தில் விவாகரத்து கேட்கும் அளவுக்குக் கேவலமான நிலையில் உங்களது தனிமனித வாழ்க்கை இருக்கிறதே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

இப்படிப்பட்ட அசிங்கமான பின்னணியை வைத்துக் கொண்டு, எந்த முகத்தோடு சட்டமன்றத்தில் நின்று அடுத்தவர்கள் குடும்பத்தைப் பற்றிக் குட்டிக்கதை சொல்கிறீர்கள்?

மேடைக்கு மேடை ‘தனிமனித ஒழுக்கம்’ என்று ஊருக்கு உபதேசம் செய்யும் ‘சோஃபா மாடல்’ முதலமைச்சரே, முதலில் உங்களது சொந்தக் குடும்பத்தின் வண்டவாளங்களைச் சரிசெய்துவிட்டு, அப்புறம் சட்டமன்றத்தில் வந்து வாய் கிழியப் பேசுங்கள்!

DMK IT WING



தமிழ்நாடு உருது முஸ்லீம் நல அமைப்பு (TAMILNADU URDU MUSLIM WELFARE ORGANISATION) மாநில நிர்வாகிகள் (22.06.2026), அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

### திருவாரூர் வருகைதரும்

# கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் - இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்டக் கழகம் சார்பில் பிரமாண்ட வரவேற்பு!

*திருவாரூர், ஜூன் 25 -*

கழகத் தலைவரும், திராவிட மாடல் ஆட்சியின் பிதமாகருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்க ளும், தமிழ் நாட்டு இளைஞர்களின் நம்பிக்கை, கழக இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், கழகக் கோட்டையாம் திருவாரூருக்கு வருகை தருவதையொட்டி மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தின் அடையாளங்களில் ஒன்றாக திகழும் கலைஞர் கோட்டத்தில் இன்று (25.06.2026 - வியாழன்) நடைபெற இருக்கும், கழக விவசாய தொழிலாளர் அணியின் மாநில தலைவரும் , முன்னாள் அமைச்சருமான உ.மதிவாணன் அவர்களின் இல்லத்திருமண நிகழ்விற்கு தலைமையேற்றும், மணமக்கள் மதி. கதிரவன் - த.மௌனிகா ஆகியோரின் திருமணத்தை நடத்திவைக்கவும் வருகை தரும் கழக தலைவரும், திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ் நாட்டு இளைஞர்களின் நம்பிக்கை, கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், திருவாரூரில் மாவட்டக்கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையில், கழக தோழர்கள், நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் திரண்டு உற்சாக வரவேற்பளிக்க இருக்கின்றனர்.

நாடாளுமன்ற, சட்டமன்ற, முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களின் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்று கழக தலைவரும், திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாட்டு இளைஞர்களின் நம்பிக்கை, கழக இளைஞர் அணிச்செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வரவேற்பளிப்பதுடன், இந்த திருமண விழாவில் பங்கேற்றும் சிறப்பிக்கின்றனர்.

### திருச்சி மத்திய – வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி – ந.தியாகராஜன் அறிவிப்பு!





*திருச்சி ஜூன் 25 -*

திருச்சி, மத்திய - வடக்கு மாவட்டங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகின்றது என்று மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந.தியாகராஜன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அது வருமாறு:

28.06.2026 - ஞாயிறு - மண்ணச்சநல்லூர் - தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ.,

29.06.2026 - திங்கள் - துறையூர் - கோ.வி.செழியன் எம்.எல்.ஏ.,

30.06.2026 - செவ்வாய் - இலால்குடி - மருது அழகுராஜ் ,

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### க.மோகன் தலைமை, சிவசங்கரய்யா முன்னிலை! த.ஜெயகுமார் வரவேற்புரை!

# பம்மல் வடக்கு பகுதி - 3வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி சிறப்புரை!

*காஞ்சிபுரம், ஜூன் 25 -*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி 3வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம், 21.06. 2026 - ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணிக்கு, அனகாபுத்தூர் அன்னை மினி ஹாலில் வட்டக் கழக செயலாளர் க.மோகன் தலைமையில் நடைபெற்றது.


கழக மூத்த முன்னோடி சிவசங்கரய்யா முன்னிலை வகித்தார். பகுதிச் செயலாளர் த. ஜெயகுமார் வரவேற்புரையாற்றினார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி சிறப்புரை ஆற்றினர்.

நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் ஜி.ரகு, ஆர்.எம்.முருகன், பி.ஆர். ரவி, ஆர்.கே.நரசிம்மன், பி.முரளி பகுதி கழக துணைச் செயலாளர் க.ஜெயசீலன், பகுதி கழக பொருளாளர் ச.பிரபு, மாநகரப் பிரதிநிதி இரா. பாபுஜி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஞா.பிரபு, தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் ஆ.செந்தில்குமார், மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் எம். டி. விஜயகுமார், கழக முன்னோடிகள் மோ.சுதாகர், செ.சவரிமுத்து, வீரபத்திரன், கா.சோமு, டி.. கோபால், கே.எஸ்.பாபு, ஜே.குமார், டி.அன்பு, ஆடிட்டர் சபீக், விஜயகணேஷ், குப்பன், சேகர், பி.ஏ. கண்ணையா, ராமமூர்த்தி, பாஸ்கர், ஜிந்தா பாய், திருபால், ரமேஷ், பாபுராஜ், தங்கராஜ், சொக்கலிங்கம், காண்டீபன், ஜெய்சங்கர், மோ.சரவணன், எஸ்.ஜெயக்குமார், குமரேசன், இ.கருணாகரன், ஆட்டோதுரை, இ.மதிவாணன், இன்பராஜ், மணி, ஷேக், சத்யா, சந்திரன், கணேசன், தியாகராஜன், தினேஷ், ரூத்மேரி, தமிழ், அஜித், சேகர், குட்டி, சூர்யா, ஐயப்பா, மகேஷ், சண்முகம், நாகூர் மீரான், முருகன், பிரவீன், சரவணன், ஆனந்த், மதன், ரமேஷ், மற்றும் தாமு ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி.பி. சோமசுந்தரம்

### ஜூன் 25 (1971)



கழகத்தின் முதுபெரும் தலைவர். “பட்டாளத்துச் சிங்கம்” எனவும், “சேலத்துப் பெரியார்” எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### நெல்லை எம்,எம்,சாமி தலைமை! இரா,பொன்ராம் – ஜெ,விஜயகுமார் பங்கேற்பு!

# சலவை தொ.மு.ச.சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்! நலஉதவிகள்!

### கி.நடராசன் – கோ.சி.வள்ளுவன் வழங்கினர்!

*சென்னை, ஜூன் 25 -*

அகில இந்திய தொ.மு.ச. பொது செயலாளர் மு.சண்முகம் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு சலவைத் தொ.மு.ச. சார்பில் சென்னை தொ.மு.ச பேரவை கலைஞர் அரங்கத்தில் முத்தமிழர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சலவைத் தொ. மு.ச.மாநில தலைவர் நெல்லை எம்.எம்.சாமி தலைமையில் கட்பீஸ் ப. சோமசுந்தரமூர்த்தி, வெ.சு. சத்தியநாராயணன்,

எஸ்.பி.எஸ்.புத்தன், ஜெ.சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேரவை தலைவர் கி.நடராசன், மற்றும் பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேரவை நிர்வாகிகள் இரா.பொன்ராம், ஜெ. விஜயகுமார், பன்னீர்செல்வம், SCTC அலுவலக செயலாளர்கள் பன்னீர்செல்வம், சண்முகசுந்தரம், பத்மநாபன், அருண கிரிநாதன், சென்னை மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள் எஸ். சுந்தரமூர்த்தி, கே. இளங்கோவன், கி.கண்ணன், கே.தங்கராஜ், வி.யூ. கார்த்திகேயன், மோ.செந்தில்குமார், எஸ்.யுவராஜ், சி.செந்தாமரை, பேரவை அமுல்ராஜ், அசோகன், விஜயகுமார், முருகன், கார்த்தி, சைதை ஜெயபால், கா.ரீதர், கிருஷ்ணாகிரி வெங்கடேசன், சிவக்குமார், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நெல்லை எம்.எம்.சாமி நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்திருந்தார்.

### பட்டூர் எஸ்,ஜபருல்லா தலைமை! எம்,ஆர்,சீனிவாசன் முன்னிலை! ஆ,கிருஷ்ணசாமி – படப்பை ஆ,மனோகரன் பங்கேற்பு!

# மாங்காடு ர.ரவி - ர.ரோஜா இல்லத் திருமண வரவேற்பு!

### முன்னாள் அமைச்சர் தா,மோ,அன்பரசன் வாழ்த்துரை!

*காஞ்சிபுரம், ஜூன் 25 -*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாங்காடு நகர தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ர.ரவி ர.ரோஜா ஆகியோரின் புதல்வர் ர.ராகுல்டிராவிட், மாங்காடு ஸ்ரீ சக்ரா நகர் ந.சுந்தர்ராஜன் சு.பெருந்தேவி ஆகியோரின் புதல்வி சு.காயத்ரி (எ) கமலி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (25.06.2026 - வியாழக்கிழமை), மாலை 6.00 மணியளவில் கல்யாணி திருமண மண்டபம், மாங்காடு பிரதான சாலை, சென்னை 122. ல் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பிற்கு மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா தலைமை வகிக்கிறார்.

மாங்காடு நகரச் செயலாளர் எம்.ஆர்.சீனிவாசன் முன்னிலை வகிக்கிறார்.

ஜி.ராமு, எம்.எஸ்.மகேந்திரன், ஜி.எம்.வில்லியம்ஸ், சுசீலாஇராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர், பி.முருகையன், ஆர்.சாரதி, பி.ராஜேந்திரன், ஜெ.கனகராஜ், ஜி. முனுசாமி, டி.வாசுதேவன், ஆர்.புஷ்பராஜ், ஆர். குமார், பி.மதியழகன், எஸ். வேலுமணி, எல்.பிரகாஷ், டி.நெல்சன், ஆர்.விக்னேஷ், வி.ஜெபபோஸ், பி. முனுசாமி, ஏ.தமிழ்வாணன், பி.ராக்கி, டி.ராஜ்கிளின்டன், ஆர்.சாம்வில்சன், ஆர்.உதயா, டி.மகிமைராஜ், வி.சுமன், ஏ. கார்த்திக், சே.பிரபு, எம். பாலாஜி, அ.டில்லி, பி.திருநாவுக்கரசு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மண விழா வில் முன்னாள் அமைச்சர் தா. மோ.அன்பரசன் - ஆ.கிருஷ்ணசாமி, படப்பை ஆ.மனோகரன் உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

# இது தான் அந்த ஒரிஜினல் கதை..!

அந்த பெரியவர், நல்ல வெய்யில்ல தன்னோட புருவத்துக்கு மேல, நெத்தில கைய வச்சிக்கிட்டு சுத்தியும் பார்த்தாராம். ஒரு குட்டிப்பையன் வந்து என்ன தேடுறீங்கன்னு கேட்டதற்கு...

அந்த பெரியவர் சொன்னாராம், உங்க அப்பாவ தேடுறேன் தம்பின்னு.

ஏன் எங்க அப்பாவைத் தேடுறீங்கன்னு அந்தப் பையன் கேட்டதுக்கு...

நான் ஒரு விவசாயி தம்பி... உங்கப்பா மூணுலட்சம் பேருக்கு இலவச மின் இணைப்பு கொடுத்தாரு, நெல் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தாரு, வருடா வருடம் ஜீன்12 தண்ணிய மேட்டூர்லேர்ந்து திறந்து விட்டிட்டுருந்தாரு, மின் வெட்டு இல்லாம, மே மாசத்துலேயே குறுவை சாகுபடிக்கு ஏற்பாடு செஞ்சாரு. முப்போகம் விளைவிச்சோம், வரலாறு காணாத விளைச்சல்... ஏகப்பட்ட நெல் கொள்முதல் நிலையங்களை அஞ்சு வருசத்துல புதுசா திறந்தாரு... இன்னும் 20 லட்சம் அதி நவீன மின் மோட்டார் தர்றேன்னும் சொன்னாரு தம்பி...

ஆனா திடீர்ன்னு ஒருத்தன் வந்து, நீங்க வாங்கியிருக்குற கடனை எல்லாம் முழுசா தள்ளுபடி பண்ணிடறேன்னு சொல்லி, எங்களை ஏமாத்தி, எங்க கையில இருந்த வாக்குகளை திருடிட்டு போயிட்டான் தம்பி...! இப்ப எங்க கடனையும் முழுசா தள்ளுபடி பண்ணாம ஏமாத்திட்டான் தம்பி...!

அதனாலதான்உங்கப்பாவதேடிட்டிருக்கேன் தம்பி... தப்பு பண்ணிட்டோம் சாமி... திரும்ப வாங்க... நாங்க இருக்கோம் உங்க கூடன்னு சொல்றதுக்குத் தான், உங்கப்பாவை தேடிட்டிருக்கோம் தம்பி..!

உங்கப்பா திரும்பி வர வரைக்கும், எங்கள ஏமாத்துனவன சும்மா விடாதீங்க தம்பி...!

இது தான் அந்த ஒரிஜினல் கதை..!



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*